உ
சிவமயம்



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் அனலைதீவு
சுப்பிரமணியம் நாகமுத்து தம்பதிகளின் புதல்வனும்
திருமதி வள்ளியம்மையின் அன்புக் கணவரும்
திருகோணமலை வீரபாலன் கொம்பனி
உரிமையாளருமான

அமரர்

## ஸ்ரீமான் சு. வீரகத்தி

அவர்கள் சிவபதமடைந்தபேறு குறித்த

# நினைவு மலர்

மலர்வு : 30-11-1925

சிவபதம் : 4-3-1984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் ஸ்ரீமான் சு. வீரகத்தி

மலர்வு :
*30 - 11 - 1925*

சிவபதம் :
*4 - 3 - 1984*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமான் சு. வீரகத்தி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு.

ஈழமணித் திருநாட்டின் வடபகுதியில் அமைந்துள்ள தீவுக்கூட்டங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது அனலைதீவு என்னும் ஊராகும். இவ்வூரிலே சைவசமயிகளே வாழ்கின்றூர்கள் என்ற பெருமையுடன் செந்தமிழும், சைவநெறியும் தழைத்தோங்குகின்றது.

இவ்வூரின் கண்ணே உயர் சைவவேளாளர் குலத்தில் காலஞ்சென்ற சுட்பிரமணியம் நாகமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புதல்வராக ஐயன் கிருபைபெற்று 1925-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30-ம் திகதி அமரர் சு. வீரகத்தி அவர்கள் அவதரித்தார். சிறுபராயத்திருந்தே அவரது சிறிய தந்தையார் V. V. ஆறுமுகம் அவர்களின் உதவியுடன் குளியாப்பிட்டியில் வணிகத்தொழிலை நடாத்தி பிரபல வர்த்தகராகத் திகழ்ந்தார்.

பிரபல வர்த்தகர் வையாபுரி மீனுட்சி தம்பதிகளின் புதல்வி வள்ளியம்மையை மணம்செய்து இல்லறத்தை நல்லறமாக நடாத்திவரும் நாட்களில் அவர்கள் இயற்றிய தவப்பேற்றினுல் பாலசுப்பிரமணியம் (வீரபாலன் கொம்பனி) யோகராணி, ரஞ்சினிதேவி (லண்டன்) செல்வராசா (வீரபாலன் கொம்பனி) புஸ்ப்பராணி, நடேசன் (கனடா) ஸ்ரீதரன், குகராணி ஆகிய நன்மக்களைப் பெற்று மகிழ்ந் திருந்தனர். இவரின் புதல்வியாகிய ரஞ்சினிதேவி, சிவப்பிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசம் ஜெகஜோதியை திருமணம் செய்து இருவரும் லண்டனில் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

தொடர்ந்து தனது வர்த்தகத் தொழிலை திருகோண மலையில் ஆரம்பித்து நடாத்தி வந்தார் சென்ற இடத்தி லல்லாது தமது சொந்த நாட்டில் சமூகத் தொண்டனு கவும் ஐயனர் கோவில் திருப்பணிகளிலும் தொண்டாற்றி ஞர். தனது குடும்பத்திற்கு மாத்திரமன்றி உடன் பிறந் தோர்களையும், சுற்றத்தார்களையும், சார்ந்தோர்களையும் ஆதரித்து எல்லோரினதும் நன்மதிப்புடன் வாழ்ந்து 1984-ம் ஆண்டு பங்குனி மாதம் 4-ம் திகதி மாலை 4-15 மணியளவில் எல்லோரையும் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்தார்.

அன்னரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அனலைதீவு,
4 - 3 - 84.

திருமதி வீ. வள்ளியம்மை,
மக்கள் — மருமக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# தோத்திரப் பாடல்கள்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

## திருகோணமலைப் பதிகம்

நிரை கழலரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் கார் அகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடலோதம் நித்திலம் கொழிக்கும்
கோண மாமலை யமர்ந்தாரே. 1

கடிதென வந்த கரிதனையுரித்த
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு நித்திலம் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோண மாமலை யமர்ந்தாரே. 2

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தலர் மதின்மேல்
தனித்த பேருருவ யுழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெம் சிலையாக்
குனித்தோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழித்திளங்கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனூர் கமலமார் பாதர்
தெழித்து முன் அரற்றும் செழுங்கடற்றரளந்
செம்பொனு மிப்பியும் சுமந்து
கொழித்து வன்திரைகள் கரையிடைச்
சேர்க்கும் கோணமாமலை யமர்ந்தாரே. 4

தாயினும் நல்லதலைவ ரென்றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின்றகலா
மாண்பினர் காண் பலவேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்
நீக்கி நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரே. 5

பரிந்துநன் மனத்தால் வழிபடுமாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற்கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரித்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவன் செருந்திசண் பகத்தின்
குருந்தொடுமுல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே. 6

எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பு
மிறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்தோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரு புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே. 7

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவருமறியா வண்ணமொள் ளெரியா
யுயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்குங்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கும்
கோணமாமலை யமர்ந்தாரே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுணும் சமணும் இருந்துணும் தேரும்
நெறியலாதன புறம் கூற
வென்று நஞ்சுண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடுமுட னாகித்
துன்று மொண் பௌவ மௌவலும் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வசாம்வந் துலவும்
கோணமா மலையமர்ந் தாரே. 9

குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமாமலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந்தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமுமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப்பொலிந்தே. 10

## திருநாவுக்கரசுநாயனர்

## நமச்சிவாயத்திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்.

சொற்றுணைவேதியன்சோதிவானவன்
பொற்றுணைத்திருந்தடிபொருந்தக்கைதொழக்
கற்றுணைப்பூட்டியோர்கட லிற்பாய்சினு
நற்றுணையாவதுநமச்சிவாயவே. 1

பூவினுக்கருங்கலம்பொங்குதாமரை
யாவினுக்கருங்கலமரனஞ்சாடுதல்
கோவினுக்கருங் கலங்கோட்டமில்லது
நாவினுக்கருங்கலநமச்சிவாயவே. 2

விண்ணுறவடுக்கியவிறகின்வெவ்வழ
லுண்ணியபுகிலவையொன்றுமில்லையாம்
பண்ணியவுலகினிற்பயின்றபாவத்தை
நண்ணிநின்றறுப்பதுநமச்சிவாயவே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண்பட்டிருக்கினுமிரந்தியாரையும்
விடுக்கிற்பிரானென்றுவினவுவோமல்லோ
மடுக்கற்கீழ்க்கிடக்கினுமருளினூழற்ற
நடுக்கத்தைக்கெடுப்பதுநமச்சிவாயவே. 4

வெந்தநீறருங்கலம்விரதிகட்கெலா
மந்தணர்க்கருங்கலமருமறையாறங்கந்
திங்களுக்கருங்கலந்திகழிநீண்முடி
நங்களுக்கருங்கலநமச்சிவாயவே. 5

சலமிலன்சங்கரன்சார்ந்தவக்கல்லா
னலமிலனொடொறுநல்குவானலன்
குலமிலராகினுங்குலத்துக்கேற்பதோர்
நலமிகக்கொடுப்பதுநமச்சிவாயவே. 6

வீடினாருலகினில்விழுமியதொண்டர்
கூடினாரந்நெறிகூடச்சென்றலு
மோடினேனோடிச்சென்றுருவங்காண்டலு
நாடினேனாடிற்றுநமச்சிவாயவே 7

இல்லகவிளக்கதுவிருள்கெடுப்பது
சொல்லகவிளக்கதுசோதியுள்ளது
பல்லகவிளக்கதுபலருங்காண்பது
நல்லகவிளக்கதுநமச்சிவாயவே 8

முன்னெறியாகியமுதல்வன்முக்கணன்
றன்னெறியேசரணாதறிண்ணமே
யந்நெறியேசென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவதுநமச்சிவாயவே.

மாப்பிணைதழுவியமாதோர்பாகத்தன்
பூப்பிணைதிருந்தடிபொருந்தக்கைதொழ
நாப்பிணைதழுவியநமச்சிவாயப்பத்
தேத்தவல்லார்தமக்கிடுக்கணில்லையே. 10

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்
## திருக்கேதீஸ்வரப் பதிகம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை உரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார் எலும் பணிவான்திருக் கேதீச்சரத்தானே 1

சுடுவார்பொடி நீறுநல்ல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்த கறைக் கண்டன்
படவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமாவுறை கின்றான்திருக் கேதீச்சரத்தானே. 2

அங்கம்மொழி யன்னாரவர் அமரர்தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கம் செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான் திருக்கேதீச்சரத் தானே 3

கரியகறைக் கண்டனல்ல கண்மேலொரு கண்ணான்
வரியசிறை வண்டியாழ்செய் மாதோட்டநன் னகருள்
பரியதிரை எறியாவரு பாலாவியின் கரைமேல்
தெரியும்மறை வல்லான்திருக் கேதீச்சரத் தானே. 4

அங்கத்துறு நோய்களடி யார்மேல் ஒழித்தருளி
வங்கம் மலிகின்ற கடல் மதோட்ட நன்னகரில்
பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக்கேதீச்சரத் தானே. 5

வெய்ய வினையாவடி யார்மேலொழித் தருளி
வையமலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான் திருக் கேதீச்சரத் தானே. 6

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுமகடல் மாதோட்ட நன்னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத் தானே. 7

அட்டனழகாக அரைதன்மேல் அரவார்த்து
மட்டுண்டுவண் டாடும்பொழில் மாதோட்ட நன்னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டனமை யாள்வான் திருக்கேதீச் சரத்தானே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரென விருவரென முக்கணிடை மூர்த்தி
மாவின் கனி தூங்குபொழில் மாதோட்டநன் னகரில்
பாவ ் வினை யறுப்பார் பாலாவியின் கரைமேல்
தேவனெனை யாள்வான்திருக் கேதிச்சரத் தானே. 9

கறையார் கடல் சூழ்ந்தகழி மாதோட்டநன் னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ்செயும் கேதீச்சரத்தானை
மறையார்புக ழூரன்னடித் தொண்டனுரை செய்த
குறையாத்தமிழ் பத்தும்சொலக் கூடாகொடு வினையே. 10

## மாணிக்கவாசகர் தேவாரம்

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
விமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசனடி போற்றி யெந்தை யடிபோற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
யாராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனு
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ளோங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் றல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியெற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலற்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் **பணிந்து.**

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணை துணைமலர்கொண்
டேற்றி நின்றிருமுகத்தெமக்கருண்மலரு
மெழினகைகொண்டு நின் றிருவடி தொழுகோந்
சேற்றி தழ்க்கமலங்கண்மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையா யெனையுடையா
யெம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே. 1

அருணனிந்திரன் றிசையணுகினனிருள்போ
யகன்றதுவுதயநின் மலர்த்திருமுகத்தின்
கருணையின்சூரியனெழுவெழநயனக்
கடிமலர்மலர மற்றண்ணலங்கண்ணாந்
திரணிரையறுபதமுரல்வன விவையோர்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
யருணிதிதரவரு மானந்தமலையே
யலைகடலே பள்ளியெழுந்தருளாயே. 2

கூவின பூங்குயில்கூவின கோழி
குருகுகளியம்பினவியம்பின சங்க
மோவினதாரகையொளியொளியுதயத்
தொருப்படுகின்றது விருப்பொடுநமக்குத்
தேவநற்செறிகழற்றாளிணை காட்டாய்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
யாவருமறிவரியாயெமக்கெளியா
யெம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே. 3

இன்னிசைவீணையர்யாழினரொருபா
லிருக்கொடுதோத்திரமியம்பினரொருபாற்
றுன்னியபிணைமலர்க்கையினரொருபாற்
றொழுகையரழுகையர் துவள்கையரொருபாற்
சென்னியிலஞ்சலிகூப்பினரொருபாற்
திருப்பெருந்துறையுறை சிவபெருமானே
யென்னையுமாண்டுகொண்டின்னருள்புரியு
மெம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதங்கடோறுநின்றாயெனினல்லாற்
போக்கிலன்வரவிலனெனநினைப்புலவோர்
கீதங்கள்பாடுதலாடுதலல்லாற்
கேட்டறியோமுனைக்கண்டறிவாரைச்
சீதங்கொள்வயற்றிருப்பெருந்துறைமன்னா
சிந்தனைக்குமரியாயெங்கண்முன்வந்
தேதங்களறுத்தெம்மையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 5

பப்பறவீட்டிருந்துணருநின்னடியார்
பந்தனைவந்தறுத்தாரவர்பலரு
மைப்புறுகண்ணியர்மானுடத்தியல்பின்
வணங்குகின்றாரணங்கின்மணவாளா
செப்புறுகமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யிப்பிறப்பறுத்தெமையாண்டருள்புரியு
மெம்பெருமான் பள்ளியெழுந்தருளாயே. 6

அதுபழச்சுவையெனவமுதெனவறிதற்
கரிதெனவெளிதெனவமரருமறியா
ரிதுவவன்றிருவுருவிவனவனெனவே
யெங்களையாண்டுகொண்டிங்கெழுந்தருளு
மதுவளர்பொழிற்றிருவுத்தரகோச
மங்கையுள்ளாய்திருப்பெருந்துறைமன்னா
வெதுவெமைப்பணிகொளுமாறதுகேட்போ
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 7

முந்தியமுதனடுவிறுதியுமானாய்
மூவருமறிகிலர்யாவர்மற்றறிவார்
பந்தணைவிரலியுநீயுநின்னடியார்
பழங்குடிறொறுமெழுந்தருளியபரனே
செந்தழல்புரைதிருமேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறைகோயிலுங்காட்டி
யந்தணனாவதுங்காட்டிவந்தாண்டா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணகத்தேவருநண்ணவுமாட்டா
விழுப்பெருளேயுனதொழுப்படியோங்கண்
மண்ணகத்தேவந்துவாழச்செய்தானே
வண்டிருப்பெருந்துறையாய்வழிவடியோங்
கண்ணகத்தேநின்றுகளிதருதேனே
கடலமுதேகரும்பேவிரும்படியா
ரெண்ணகத்தாயுலகுக்குயிரான
வெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே. 9

புவனியிற்போய்ப்பிறவாமையினும்
போக்குகின்றேமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவனாசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனிற்புகுந்தெனையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே. 10

திருச்சிற்றம்பலம்

## திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியுமந்தமுமிலாவரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்கேட்டேயும்வாட்டடங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்
வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ங
னேதேனுமாகாள்கிடந்தாளென்னெயென்ன
யீதேயென்தோழிபரிசேலோரம்பாவாய். 1

பாசம்பரஞ்சோதிக்கென்பயிராப்பகலும்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும் வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
பேசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளுந்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய். 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தென்
னத்தனானந்தனமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீரீசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின்னன்புடைமையெல்லாமறியோமோ
சித்தமழகியார்பாடாரோநஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய். 3

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
வெண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைப்போக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ள
முண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய் 4

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம்
போலறிவோமென்றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேயறிவரியான்
கோலமும்நம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேயென்
றோலமிடினுமுணராயுணராய்காண்
ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய். 5

மானேநீநென்னலைநாளைவந்துங்களை
நானேயெழுப்புவனென்றலுநாணாமே
போனதிசைபகராயின்னம்புலர்ந்தின்றோ
வானேநிலனேபிறவேயறிவரியான்
றானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார்கழல்பாடிவந்தோர்க்குன்வாய்திறவா
யூனேயுருகாயுனக்கேயுறுமெமக்கு
மேனோர்க்குந்தங்கோனைப்பாடேலோரெம்பாவாய். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னேயிவையுஞ்சிலவோபலவோபலவமர
ருன்னற்கரியானொருவனிருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர்மெழுகொப்பா
யென்னானையென்னரையனின்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியா
லென்னேதுயிலின்பரிசேலோரெம்பாவாய். 7

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு
மேழிலியம்பவிறம்பும்வெண்சங்கெங்குங்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள்பாடினோம்கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா
யாழியானன்புடைமையாமாறுமிவ்வாறோ
ஊழிமுதல்வனாய்நின்றவொருவனை
யேழைபங்காளனையேபாடேலோரெம்பாவாய். 8

முன்னைப்பழம்பொருட்கும்முன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
யுன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோ
மின்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோரெம்பாவாய். 9

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலு
மோதவுலவாவொருதோழன்றொண்டருளன்
கோதில்குலத்தரன்றன்கோயிற்பிணாப்பிள்ளைகா
ளேதவனூரேதவன்பேராருற்றாராரயலா
ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய். 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யார்தடம்பொய்கைவுக்குமுகரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
யையாவழியடியோம்வாழ்தோங்காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குன்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
வையாநீயாட்கொண்டருளும்விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய். 11

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
காத்தும்படைத்தும்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்க்கலைக
ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கைகுடைந்துயான்பொற்பாத
மேத்தியிருஞ்சுனைநீராடலோரெம்பாவாய். 12

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தாற்
றங்கன்மலங்கழுவுவார்வந்துசார்தலினு
லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கச்சிலம்புச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பெங்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய் 13

காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக்
கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாச்சிற்றம்பலம்பாடி
வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய். 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகாலெம்பெருமானென்றென்றேநம்பெருமான்
சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமாறு
மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலேரெம்பபாவாய். 15

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவ
மென்னெஞ்சிலைகுலவிநந்த மையாளுடையா
டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு
முன்னியவணமக்குமுன்சுரக்குமின்னருளே
யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய். 16

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாததோரின்பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலபொற்பா தந்தந்தருளும்சேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழ
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய். 17

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போற்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாராவாய். 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தா
லெங்கள்பெருமானுக்கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க
வெங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
விங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழிலென்ஞாயிறெமக்கேலோரெம்பாவாய். 19

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருள்கநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்குபோகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்கும்மீறுமிணையடிகள்
போற்றிமாலுநான்முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்.

# திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற்றாமம்பூமாலைதூக்கி
முளைக்குடந்தூபநற்றீபம்வைமின்
சத்தியும்சோமியும்பார்மகளு
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங்கௌரியும்பார்பதியுங்
கங்கையும்வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம்மானைப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவியல்வார்சடையெம்பிராற்குப்
பொற்றிருச்சுண்ணமிடிக்கவேண்டு
மாவின்வடுவகிரன்னகண்ணீர்
வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்றொண்டர்புறநிலாமே
குனிமின்றொழுமினெங்கோனெங்கூத்தன்
றேவியுந்தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. 2

சுந்தரநீறணிந்தும்மெழுகித்
தூயபொன்சிந்திநிதிபரப்பி
யிந்திரன்கற்பகநாட்டியெங்கு
மெழிற்சுடர்வைத்துக்கொடியெடுமி
னந்தரர்கோனயன்றன்பெருமா
ஞழியானுதனலவேலன்றுதை
யெந்தரமாளுமையாள்கொழுநற்
கேய்ந்தபொற்சுண்ணமிடித்துநாமே. 3

சாரணிமின்களுலக்கையெல்லாங்
காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்க
ணின்றுநிலாவுகவென்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறித்துநின்று
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. 4

அறுகெடுப்பாராயனும்மரியு
மன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லா
நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதிலெய்தவில்லி
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக்கைபலவேச்சுவார்பெரிய
ருலகமெலாமுரல்போதாதென்றே
கலக்கவடியவர்வந்துநின்ருர்
காணவுலகங்கள்போதாதென்றே
நலக்கவடியோமையாண்டுகொண்டு
நான்மலர்ப்பாதங்கள்சூடத்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடி
மகிழ்ந்துபொற்சுண்ணமிடித்துநாமே. 6

சூடகந்தோள்வளையார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழாமெழுந்தார்ப்பவார்ப்ப
நாடவர்நந்தம்மையார்ப்பவார்ப்ப
நாமுமவர்தம்மையார்ப்பவார்ப்பப்
பாடகமெல்லடியார்க்குமங்கை
பங்கினனெங்கள்பராபரனுக்
காடகமாமலையன்னகோவுக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 7

வாட்டடங்கண்மடமங்கைநல்லீர்
வரிவளையார்ப்பவண்கொங்கைபொங்கத்
தோட்டிருமுண்டந்துதைந்திலங்கச்
சோற்றெம்பிரானென்றுசொல்லிச்சொல்லி
நாட்கொண்டநாண்மலர்ப்பாதம்காட்டி
நாயிற்கடைப்பட்டநம்மையிம்மை
ஆட்கொண்டவண்ணங்கள்பாடிப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 8

வையகமெல்லாமுரலதாக
மாமேருவென்னுமுலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணிறையவட்டி
மேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவறபாடிப்பாடிச்
செம்பொனுலக்கைவலக்கைபற்றி
ஐயனணிதில்லைவாணனுக்கே
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணிகொங்கைகளாடவாட
    மொய்குழல்வண்டினமாடவாடச்
சித்தஞ்சிவனொடுமாடவாடச்
    செங்கயற்கண்பனியாடவாடப்
பித்தெம்பிரானொடுமாடவாடப்
    பிறவிபிறரொடுமாடவாட
வத்தன்கருணையொடாடவாட
    வாடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 10

மாடுநகைவாணிலாவெறிப்ப
    வாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமினந்தம்மையாண்டவாறும்
    பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமினெம்பெருமானைத்தேடிச்
    சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
யாடுமினம்பலத்தாடினானுக்
    காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 11

மையமர்கண்டனைவானநாடர்
    மருந்தினைமாணிக்கக்கூத்தன்றன்னை
ஐயனையையர்பிரானைநம்மை
    யகப்படுத்தாட்கொண்டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய்யனைமெய்யர்மெய்யைப்
    போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோட்
பையரவல்குன்மடந்தைநல்லீர்
    பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. 12

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண்
    வெண்ணகைப்பண்ணமர்மென்மொழியீ
ரென்னுடையாரமுதெங்களப்ப
    னெம்பெருமானிவான்மகட்குத்
னன்னுடைக்கேள்வன்மகன்றகப்பன்
    றமையனெம்மையன்றாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்
    பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமரற்றச்சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்
சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கையிரைப்பவராவிரைக்குங்
கற்றைச்சடைமுடியான்கழற்கே
பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. 14

ஞானக்கரும்பின்றெளியைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பெறவாழ்த்திப்
பானற்றடங்கண்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே. 15

ஆவகைநாமும்வந்தன்பர்தம்மோ
டாட்செய்யும்வண்ணங்கள்பாடிவிண்மேற்
றேவர்கனாவிலுங்கண்டறியாச்
செம்மலர்ப்பாதங்கள்காட்டுஞ்செல்வச்
சேவகமேந்தியவெல்கொடியான்
சிவபெருமான்புரஞ்செற்றகொற்றச்
சேவகனாமங்கள்பாடிப்பாடிச்
செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே. 16

தேனகமாமலர்க்கொன்றைபாடிச்
சிவபுரம்பாடித்திருச்சடைமேல்
வானகமாமதிப்பிள்ளைபாடி
மால்விடைபாடிவலக்கையேந்து
மூனகமாமழுச்சூலம்பாடி
யும்பருமிம்பருமுய்யவன்று
போனகமாநஞ்சுண்டல்பாடிப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே. 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயன்றலைகொண்டுசெண்டாடல்பாடி
யருக்கனெயிறுபறித்தல்பாடிக்
கவந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்
காலனைகாலாலுதைத்தல்பாடி
யியைந்தனமுப்புரமெய்தல்பாடி
யேழையடியோமையாண்டுகொண்ட
நயந்தனைப்பாடிநின்றுடியாடி
நாதற்குச்சுண்ணமிடித்துநாமே. 18

வட்டமலர்க்கொன்றைமாலைபாடி
மந்தமும்பாடிமதியும்பாடிச்
சிட்டர்கள்வாழுந்தென்றில்லைப்பாடி
சிற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடி
கட்டியமாசுணக்கச்சைபாடிக்
கக்கணம்பாடிக்கவித்தகைம்மே
லிட்டுநின்றுடுமரவம்பாடி
யிசற்குச்சுண்ணமிடித்துநாமே. 19

வேதமும்வேள்வியுமாயினார்க்கு
மெய்மையுபொய்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளாயினார்க்குத்
துன்பமுமாயின்பமாயினார்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினார்க்குப்
பந்தமுமாய்வீடுமாயினாருக்
காதியுமந்தமுமாயினாருக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே. 20

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடைக்கலப்பத்து

திருச்சிற்றம்பலம்

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே. 1

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்றிருவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. 2

பெரும்பெருமானென்பிறவியைவேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான்சதுரப்பெருமானென்மனத்தினுள்ளே
வரும்பெருமான்மலரோனெடுமாலறியாமனின்ற
வரும்பெருமானுடையாயடியேனுன்னடைக்கலமே. 3

பொழிகின்றதுன்பப்புயல்வெள்ளத்தினின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்பர்களேறினர்வான்பானிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்றுமாதர்த்திரைபொரக்காமச்சுறவெறிய
வழிகின்றனனுடையாயடியேனுன்னடைக்கலமே. 4

சுருள்புரிகூழையர்சூழலிற்பட்டுன்றிறமறந்திங்
கிருள்புரியாக்கையிலேகிடந்தெய்த்தனன்மைத்தடங்கண்
வெருள்புரிமானன்னநோக்கிதன்பங்கவிண்ணோர்பெருமா
னருள்புரியாயுடையாயடியேனுன்னடைக்கலமே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாழைமைப்பாவியகண்ணியர்வன்மத்திடவுடைந்து
தாழியைப்பாவுதயிர்போற்றளர்ந்தேன்றடமலர்த்தாள்
வாழியெப்போதுவந்தெந்நாள்வணங்குவன்வல்வினையே
ஞழியப்பாவுடையாயடியேனுன்னடைக்கலமே. 6

மின்கணினர்நுடங்குமிடையார்வெகுளிவலையிலகப்பட்டுப்
புன்கணனய்ப்புரள்வேனைப்புரளாமற்புகுந்தருளி
யென்கணிலேயமுதூறித்தித்தித்தென்றஜைக்கிரங்கு
மங்கணனேயுடையாயடியேனுன்னடைக்கலமே. 7

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின் மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேபிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே. 8

பிறிவறியாவன்பர்நின்னருட்பெய்கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம்வந்துபெற்ருருன்னைவந்திப்பதோர்
நெறியறியேனின்னையேயறியேனின்னையேயறியு
மறிவறியேனுடையாயடியேனுன்னடைக்கலமே. 9

வழங்குகின்ருய்க்குன்னருளாரமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேனென்விதியின்மையாற்
றழங்கருந்தேனன்னதண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே. 10

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்படையாட்சி

திருச்சிற்றம்பலம்

கண்களிரண்டுமவன்கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும்வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருமாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே 1

ஒன்றினொடொன்றுமோரைந்தினொடைந்துமுயிர்ப்பதுமாகாதே
யுன்னடியாரடியாரடியோமெனவுய்ந்தனவாகாதே
கன்றைநினைந்தெழுதாயெனவந்தகணக்கதுவாகதே
காரணமாகுமனாதிகுணங்கள்கருத்துறுமாகாதே
நன்றிதுதீதெனவந்தநடுக்கநடந்தனவாகாதே
நாமுமேலாமடியாருடனேசெலநண்ணுதுமாகாதே
யென்றுமெனன்புநிறைந்தபராவமுதெய்துவதாகாதே
யேறுடையானெனையாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே. 2

பந்தவிகாரகுணங்கள்பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்தபராவமுதாகாதே
யந்தமிலாதவகண்டமுநம்முளகப்படுமாகாதே
யாதிமுதற்பரமாயபரஞ்சுடரண்ணுவதாகாதே
செந்துவர்வாய்மடவாரிடரானவைசிந்திடுமாகாதே
சேலனகண்களவன்றிருமேனிதிளைப்பனவாகாதே
யிந்திரஞாலவிடர்ப்பிறவித்துயரேகுவதாகாதே
யென்னுடைநாயகனாகியவீசனெதிர்ப்படுமாயிடிலே. 3

என்னணியார்முலையாகமளைந்துடனின்புறுமாகாதே
யெல்லையின்மாக்கருணைக்கடலின்றினிதாடுதுமாகாதே
நன்மணிநாதமுழங்கியெனுள்ளுறநண்ணுவதாகாதே
நாதனணித்திருநீற்றினைநித்தலுநண்ணுவதாகாதே
மன்னியவன்பரிலென்பணிமுந்துறவைகுவதாகாதே
மாமறையுமறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
யின்னியற்செங்கழுநீர்மலரென்றலையெய்துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணினின்மாயைமதித்துவகுத்தமயக்கறுமாகாதே
வானவரும்மறியாமலர்ப்பாத · வணங்குதுமாகாதே
கண்ணிலிகாலமனைத்தினும்வந்தகலக்கறுமாகாதே
காதல்செயும்மடியார்மனமின்றுகளித்திடுமாகாதே
பெண்ணலியாணெனநாமெனவந்தபிணக்கறுமாகாதே
பேரறியாதவனேகபவங்கள்பியழத்தனலாகாதே
யெண்ணிலியாகியசித்திகள்வந்தெனையெய்துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே. 5

பொன்னியலுந்திருமேனிவெண்ணீறுபொலிந்திடுமாகாதே
பூமழைமாதவர்கைகள்குவிந்துபொழிந்திடுமாகாதே
மின்னியனுண்ணிடையார்கள்கருத்துவெளிப்படுமாகாதே
வீணைமுரன்றெழுமோசையிலின்பமிகுத்திடுமாகாதே
தன்னடியாரடியென்றலைமீதுதழைப்பனவாகாதே
தானடியோமுடனேயுயவந்துதலைப்படுமாகாதே
யின்னியமெங்குநிறைந்தினிதாகவியம்பிடுமாகாதே
யென்னைமுழுதுடையீசனெனத்தனெழுந்தருளப்பெறிலே; 6

சொல்லியலாதெழுதூமணியோசைசுவைதருமாகாதே
துண்ணெனவென்னுளமன்னியசோதிதொடர்ந்தெழுமாகாதே
பல்லியல்பாயபரப்பறவந்தபராபரமாகாதே
பண்டறியாதபராநுபவங்கள்பரந்தெழுமாகாதே
வில்லியனன்னுதலார்மயலின்றுவிளைந்திடுமாகாதே
விண்ணவரும்மறியாதவிழுப்பொருளிப்பொருளாகாதே
யெல்லையிலாதனவென்குணமானவையெய்திடுமாகாதே
யிந்துசிகாமணியெங்களையாளவெழுந்தருளப்பெறிலே. 7

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்கணம்மோடுசலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
யாசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சீரடியார்கள்சிவாநுபவங்களெரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா

ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றே
யுணர்வுசூழ்கடந்ததோருணர்வே
தெளிவளர்பளிங்கின்றிரண்மணிக்குன்றே
சித்தத்துட்டித்திக்குந்தேனே
யளிவளருள்ளத்தானந்தக்கனியே
யம்பலமாடரங்காக
வெளிவளர்தெய்வக்கூத்துகந்தாயைத்
தொண்டனேன்விளம்புமாவிளம்பே. 1

இடர்கெடுத்தென்னையாண்டுகொண்டென்னு
ளிருட்பிழம்பறவெறிந்தெழுந்த
சுடர்மணிவிளக்கினுள்ளொளிவிளங்குந்
தூயநற்சோதியுட்சோதி
யடல்விடைப்பாகாவம்பலக்கூத்தா
வயனொடுமாலறியாமைப்
படரொளிபரப்பிப்பரந்துநின்றாயைத்
தொண்டனேன்பணியுமாபணியே. 2

தற்பரம்பொருளே சசிகண்டசிகண்டா
சாமகண்டாவண்டவாணா
நற்பெரும்பொருளாயுரைகலந்துன்னை
யென்னுடைநாவினாவில்லா
னற்பனென்னுள்ளத்தளவிலாவுன்னைத்
தந்தபொன்னம்பலத்தாடீ
கற்பமாயுலகாயல்லையானாயைத்
தொண்டனேன்கருதுமாகருதே. 3

பெருமையிற்சிறுமைபெண்ணொடாணாயென்
பிறப்பிறப்பறுத்தபேரொளியே
கருமையின்வெளியேகயற்கணாளிமவான்
மகளுமையவள்களைகண்ணே
யருமையின்மறைநான்கோலமிட்டரற்று
மப்பனேயம்பலத்தமுதே
யொருமையிற்பலபுக்குருவிநின்றாயைத்
தொண்டனேனுரைக்குமாறுரையே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலமேமேலைவானவர்கோவே
குணங்குறியிறந்ததோர்குணமே
காலமேகங்கைநாயகாவெங்கள்
காலகாலாகாமநாசா
வாலமேயமுதுண்டம்பலஞ்செம்பொற்
கோயில்கொண்டாடவல்லானே
ஞாலமேதமியேனற்றவத்தாயைத்
தொண்டனேனணுகுமாநணுகே 5

நீறணிபவளக்குன்றமேநின்ற
நெற்றிக்கண்ணுடையதோர்நெருப்பே
வேறணிபுவனபோகமேயோக
வெள்ளமேமேருவில்வீரா
வாறணிசடையெம்மற்புதக்கூத்தா
வம்பொன்செயம்பலத்தரசே
யேறணிகொடியெம்மீசனேயுன்னைத்
தொண்டனேனிசையுமாறிசையே. 6

தனதனற்றோழாசங்கராசூல
பாணியேதாணுவேசிவனே
கனகநற்றூணேகற்பகக்கொழுந்தே
கண்கண்மூன்றுடையதோர்கரும்பே
யனகனேகுமரவிநாயகசனக
வம்பலத்தமரசேகரனே
யுனகழலிணையென்னெஞ்சினுளினிதாத்
தொண்டனேனுகருமாநுகரே. 7

திறம்பியபிறவிச்சிலதெய்வநெறிக்கே
திகைக்கின்றேன்றனைத்திகையாமே
நிறம்பொன்னுமின்னுநிறைந்தசேவடிக்கீழ்
நிகழ்வித்தநிகரிலாமணியே
யறம்பலதிறங்கண்டருந்தவர்க்கரசா
யாலின்கீழிருந்தவம்பலவா
புறஞ்சமண்புத்தப்பொய்கள்கண்டாயைத்
தொண்டனேன்புணருமாபுணரே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கனற்றலையுமெச்சன்வன்றலையுந்
தாமரைநான்முகன்றலையு
மொக்கவிண்டுருளவொண்டிருப்புருவ
நெறித்தருளியவுருத்திரனே
யக்கணிபுலித்தோலாடைமேலாட
வாடப்பொன்னம்பலத்தாடுஞ்
சொக்கனேயெவர்க்குந்தொடர்வரியாயைத்
தொண்டனேன்றொடருமாதொடரே. 9

மடங்களாய்க்கனகன்மார்புகீண்டானுக்
கருள்புரிவள்ளலேமருளா
ரிடங்கொண் முப்புரம்வெந்தவியவைதிகத்தே
ரேறியவேறுசேவகனே
யடங்கவல்லரக்கனருட்டிருவரைக்கீ
ழடர்த்தபொன்னம்பலத்தரசே
விடங்கொள்கண்டத்தெம்விடங்கனேயுன்னைத்
தொண்டனேன்விரும்புமாவிருப்பே. 10

மறைகளுமமரர்கூட்டமுமாட்டா
தயன்றிருமாலொடுமயங்கி
முறைமுறைமுறையிட்டோர்வரியாயை
மூர்க்கனேன்மொழிந்தபுன்மொழிக
ளறைகழலரன்சீரறிவிலாவெறுமைச்
சிறுமையிற்பொறுக்குமம்பலத்து
ணிறைதருகருணைநிலயமேயுன்னைத்
தொண்டனேனினையுமாநினையே. 11

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

திருச்சிற்றம்பலம்.

மன்னுகதில்லைவளர்கநம்பத்தர்கள்வஞ்சகர்போயகலப்
பொன்னின்செய்மண்டபத்துள்ளேபுகுந்து புவனியெல்லாம்விளங்க
வன்னநடைமடவாளுமைகோனடியோமுக்கருள்புரிந்து
பின்னைப்பிறவியறுக்கநெறிதந்தபித்தற்குப்பல்லாண்டுகூறுதுமே. 1

மிண்டுமனத்தவர்போமின்கண்மெய்யடியார்கள்விரைந்துவம்மின்
கொண்டுங்கொடுத்துங்குடிகுடியீசற்காட்செய்மின்குழாம்புகுந்
தண்டங்கடந்தபொருளளவில்லதோரானந்தவெள்ளப்பொருள்
பண்டுமின்றுமென்றுமுள்ளபொருளென்றேபல்லாண்டுகூறுதுமே 2

நிட்டையிலாவுடனீத்தென்னையாண்டநிகரிலாவண்ணங்களுஞ்
சிட்டன்சிவனடியாரைச்சீராட்டுந்திறங்களுமேசிந்தித்
தட்டமூர்த்திக்கென்னகநெகவூறுமமிர்தினுக்காலநிழற்
பட்டனுக்கென்னைத்தன்பாற்படுத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. 3

சொல்லாண்டசுருதிப்பொருள்சோதித்ததூய்மனத்தொண்டருள்ளீர்
சில்லாண்டிற்சிதையுஞ்சிலதேவர்சிறுநெறிசேராமே
வில்லாண்டகனகத்திரண்மேருவிடங்கன்விடைப்பாகன்
பல்லாண்டென்னும்பதங்கடந்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. 4

புரந்தரன்மாலயன்பூசலிட்டோலமிட்டின்னம்புகலரிதா
யிரந்திரந்தழைப்பவென்னுயிராண்டகோவினுக்கென்செயவல்ல
[மென்றுங்
கரந்துங்கரவாதகற்பகனாகிக்கரையில்கருணைக்கடல்
பரந்துநிரந்தும்வரம்பிலாப்பாங்கற்கேபல்லாண்டுகூறுதுமே.

சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மாலெங்குந்திசைதிசையன
கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழாமாய்நின்றுகூத்தாடு
மாவிக்கமுதையென்னார்வத்தனத்தினையப்பனையொப்பமரர்
பாவிக்கும்பாவகத்தப்புறத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருந்திருவும்பொலியச்சிவலோகநாயகன்சேவடிக்கீ
ழாரும்பெருதவறிவுபெற்றேன்பெற்றதார்பெறுவாருலகி
லூருமுலகுங்கழறவுழறியுமைமணவாளனுக்காட்
பாரும்விசும்புமறியும்பரிசுநாம்பல்லாண்டுகூறுதுமே. 7

சேலுங்கயலுந்திளைக்குங்கண்ணாரிளங்கொங்கையிற்செங்குங்குமம்
போலும்பொடியணிமார்பிலங்குமென்றுபுண்ணியர்போற்றிசைப்ப
மாலுமயனுமறியாநெறிதந்துவந்தென்மனத்தகத்தே
பாலுமமுதமுமொத்துநின்றானுக்கேபல்லாண்டுகூறுதுமே. 8

பாலுக்குப்பாலகன்வேண்டியழுதிடப்பாற்கடலீந்தபிரான்
மாலுக்குச்சக்கரமன்றருள்செய்தவன்மன்னியதில்லைதன்னு
ளாலிக்குமந்தணர்வாழ்கின்றசிற்றம்பலமேயிடமாகப்
பாலித்துநட்டம்பயிலவல்லானுக்கேபல்லாண்டுகூறுதுமே 9

தாதையைத்தாளறவீசியசண்டிக்குமண்டத்தொடுமுடனே
பூதலத்தோரும்வணங்கப்பொற்கோயிலும்போனகமுமருளிச்
சோதிமணிமுடித்தாமமுநாமமுந்தொண்டர்க்குநாயகமும்
பாதகத்துக்குப்பரிசுவைத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே. 10

குழலொலியாழொலிகூத்தொலியேத்தொலியெங்குங்குழாம்பெருகி
விழவொலிவிண்ணளவுஞ்சென்றுவிம்மிமிகுதிருவாரூரின்
மழவிடையாற்குவழிவழியாளாய்மணஞ்செய்குடிப்பிறந்த
பழவடியாரொடுங்கூடியெம்மானுக்கேபல்லாண்டுகூறுதுமே. 11

ஆரார்வந்தாரமரர்குழாத்திலணியுடையாதிரைநா
ளாராயணனொடுநான்முகனங்கியிரவியுமிந்திரனுந்
தேரார்வீதியிற்றேவர்குழாங்கடிசையனைத்துநிறைந்து
பாரார்தொல்புகழ்பாடியுமாடியும்பல்லாண்டுகூறுதுமே. 12

எந்தையெந்தாய்சுற்றமுற்றுமெமக்கமுதாமெம்பிரானென்றென்று
சிந்தைசெய்யுஞ்சீவன்சிரடியாரடிநாய்செப்புறை
யந்தமிலானந்தச்சேந்தனெனைப்புகுந்தாண்டுகொண்டாருயிர்மேற்
பந்தம்பிரியப்பரிந்தவனேயென்றுபல்லாண்டுகூறுதுமே 13

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமந்திரம்

## சரீரசித்தி உபாயம்

உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்
உடம்பைவ ளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே. 1

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்
றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே: 2

சுழற்றிக் கொடுக்கவே சுத்தி கழியுங்
கழற்றி மலத்தைக் கமலத்தைப் பூரித்
துழற்றிக் கொடுக்கும் உபாயம் அறிவார்க்
கழற்றி தவிர்ந்துடல் அஞ்சன மாமே. 3

அஞ்சனம் போன்றுட லையறு மந்தியில்
வஞ்சக வாத மறுமந்தி யானத்தீற்
பெஞ்சிறு காலையிற் செய்திடிற் பித்தறும்
நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே 4

மூன்று மடக்குடைப் பாம்பிரண் டெட்டுள
வேன்ற வியந்திரம் பன்னிரண் டங்குலம்
நான்றவிம் முட்டை யிரண்டையுங் கட்டியிட்
டுன்றி யிருக்க உடம்பழி யாதே. 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறும் அறுபதும் ஆறும் வலம்வர
நூறும் அறுபதும் ஆறும் இடம்வர
நூறும் அறுபதும் ஆறும் எதிரிட
நூறும் அறுபது மாறும் புகுவரே 6

சத்தியார் கோயி லிடம்வலஞ் சாதித்தான்
மத்தியா னத்திலே வாத்தியங் கேட்கலாந்
தித்தித்த கூத்துஞ் சிவனும் வெளிப்படுஞ்
சத்தியஞ் சொன்னேஞ் சதாநந்தி ஆணையே 7

திறத்திறம் விந்துத் திகழு மகார
முறப்பெற வேநினைந் தோதுஞ் சகார
மறிப்பது மந்திர மன்னிய நாத
மறப்பெற யோகிக் கறநெறி யாமே. 8

உந்திச் சுழியின் உடனே பிராணனைச்
சிந்தித் தெழுப்பிச் சிவமந் திரத்தினுல்
முந்தி முகட்டின் நிறுத்தி அபானனைச்
சிந்தித் தெழுப்பச் சிவனவ னுமே. 9

மாரு மலக்குதந் தன்மே லிருவிரற்
கூரு இலிங்கத்தின் கீழே குறிக்கொண்மின்
ஆரு உடம்பிடை அண்ணலும் அங்குளன்
கூரு உபதேசங் கொண்டது காணுமே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணச் செய்யுட்டிரட்டு

திருச்சிற்றம்பலம்.

உலகெலாமுணர்ந்தோதற்கரியவ
னிலவுலாவியநீர்மலிவேணிய
னலகில்சோதியனம்பலத்தாடுவான்
மலர்சிலம்படிவாழ்த்திவணங்குவாம்.

எடுக்குமாக்கதையின்றமிழ்ச்செய்யுளாய்
நடக்குமேன்மைநமக்கருள்செய்திடத்
தடக்கையைந்துடைத்தாழ்செவிநீண்முடிக்
கடக்களிற்றைக்கருத்துளிருத்துவாம். 1

ஆதியாய்நடுவுமாகியளவிலாவளவுமாகிச்
சோதியாயுணர்வுமாகித்தோன்றியபொருளுமாகிப்
பேதியாவேகமாகிப்பெண்ணுமாயாணுமாகிப்
போதியாநிற்குந்தில்லைப்பொதுநடம்போற்றிபோற்றி. 2

கற்பனைகடந்தசோதிகருணையேயுருவமாகி
யற்புதக்கோலநீடியருமறைச்சிரத்தின்மேலாஞ்
சிற்பரவியோமமாகுந்திருச்சிற்றம்பலத்துணின்று
பொற்புடனடஞ்செய்கின்றபூங்கழல்போற்றிபோற்றி. 3

தண்ணளிவெண்குடைவேந்தன்செயல்கண்டுதரியாது
மண்ணவர்கண்மழைபொழிந்தார்வானவர்பூமழைபொழிந்தா
ரண்ணலவன்கண்ணெதிரேயணிவீதிமழவிடைமேல்
விண்ணவர்கடொழநின்றான்வீதிவிடங்கப்பெருமான் 4

சடைமருங்கிளம்பிறையுந்தனிவிழிக்குந்திருநுதலு
மிடமருங்கிலுமையாளுமெம்மருங்கும்பூதகணம்
புடைநெருங்கும்பெருமையுமுன்கண்டரசன்போற்றிசைப்ப
விடைமருவும்பெருமானும்விறல்வேந்தற்கருள்கொடுத்தான். 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம்பொலியமறைச்சிலம்பார்ப்பமன்றுளேமாலயன்றேட,
வையர்தாம்வெளியே யாடுகின்றாரை யஞ்சலிமலர்த்திமுன்போற்றுங்,
கைகளோதிளைத்த கண்களோவந்தக் கரணமோகலந்தவன்புந்தச்,
செய்தவம்பெரியோன்சென்றுதாழ்ந்தெழுந்தான்றிருக்க
ளிற்றுப்படிமருங்கு. 6

ஐந்துபேரறிவுங்கண்களேகொள்ளவளப்பருங்கரணங்கணான்குஞ்
சிந்தையேயாகக்குணமொருமூன்றுந்திருந்துசாத்துவிகமேயாக
விந்துவாழ்சடையானாடுமானந்தவெல்லையிறனிப்பெருங்கூத்தின்
வந்தபேரின்பவெள்ளத்துட்டிளைத்துமாறிலாமகிழ்ச்சியின்மலர்ந்தார். 7

தெண்ணிலாமலர்ந்த வேணியாயுன்றன்றிருநடங்கும்பிடப்பெற்று
மண்ணிலேவந்தபிறவியேயெனக்குவாலிதாமின்பமாமென்று
கண்ணிலானந்தவருவிநீர்சொரியக்கைம்மலருச்சிமேற்குவித்துப்
பண்ணினானீடியறிவரும்பதிகம்பாடினார்பரவினார்பணிந்தார். 8

சொல்லுவதறியேன்வாழிதோற்றிபதோற்றம்போற்றி
வல்லைவந்தருளியென்னைவழித்தொண்டுகொண்டாய்போற்றி
யெல்லையிலின்பவெள்ளமெனக்கருள்செய்தாய்போற்றி
தில்லையம்பலத்துளாடுஞ்சேவடிபோற்றியென்ன. 9

ஆனாயர்குழலோசைகேட்ட ருளியருட்கருணை
தானாயதிருவுள்ளமுடையதவவல்லியுடன்
கானாதிகாரணராங்கண்ணுதலார்விடையுகைத்து
வானாறுவந்தணைந்தார்மதிநாறுஞ்சடைதாழ. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

**தனதனன தான தனதனன தான**
**தனதனன தானத் தனதானு.**

திருமகளு லாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படவசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி வுரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே. (1)

**தனன தான தானன தனன தான தானன**
**தனன தான தானன தனதான;**

அலகின் மாறு மாருத கலதி பூத வேதாளி
அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணுறு புழுகு பூசி வாழ்மாதர்
அருளி லாத தோடோய மருளாகி
பலக லாக ராமேரு மலைக ராச லாவிசு
பருவ மேக மேதாரு எனயாதும்
பரிவு றுத மாபாதர் வரிசை பாடி ஓயாத
பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகு வேலை நீள்வாடை எரிகொள் வேலை மாருரி
லெறியும் வேலை மாருத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார
விறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை ஆறு சூழ்சித
கதிர காம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதன தனதன தனதன தனதன
தானத் தனந்த தனதான.

கடகட வருவிகள் நபவரி அதிர்கதிர்
காமத் தரங்க மலைவீரா
கனகத நகுலி புணரித குணகுக
காமத் தனஞ்சம் புயனோட
வடசிக ரகிரித விடுபட நடமிது
மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென
வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை
யாயப் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி
யாளப் புயங்கொண் டருள்வோனே
இடமொரு மரகத மயிலிசை வடிவுள
ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினு
மேழைக் கிரங்கும் பெருமாளே. (3)

தனனதன தானத்த தனனதன தானத்த
தனனதன தானத்த தனதானதானன.

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலுலாவியே
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாகமேவியே
உமதடியு ளுருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை எனுமாயமாதரார்
ஒளிரமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்க்ரு பாசித்தம் அருள்கூரவேணுமே
இமகிரிகு மாரத்தி அநுபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி உமையாள்குமாரனே
எயினர்மட மானுக்கு மடலெழுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவிசாகனே
அமர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியகு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபிராமனே. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தா தனதான.

சரத்தே உதித்தா யுரத்தே குதித்தே
சமர்த்தா எதிர்த்தே வருசூரைச்
சரிப்போ னமட்டே விடுத்தா யடுத்தாய்
தகர்த்தா யுடற்றூன் இருகூறுச்
சிரத்தோ டுரத்தோ டறுத்தே குவித்தாய்
செகுத்தாய் பலத்தார் விருதாகச்
சிறைச்சே வல்பெற்றாய் வலக்கா ரமுற்றாய்
திருத்தா மரைத்தாள் அருள்வாயே
புரத்தார் வரத்தார் சரச்சே கரத்தார்
பொரத்தா னெதிர்த்தே வருபோது
பொறுத்தார் பரித்தார் சிரித்தார் எரித்தார்
பொரிந்தார் நுதற்பார் வையிலேபின்
கரித்தோ லுரித்தார் விரித்தார் தரித்தார்
கருத்தார் மருத்தூர் மதனுரைக்
கரிக்கோ லமிட்டார் கணுக்கா னமுத்தே
கதிர்க்கா மமுற்றூர் பெருமாளே. (5)

தனதன தத்தனத் தனதன தத்தனத்
தனதன தத்தனத் தனதான.

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான
துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனே
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தானதன தத்தத்த தானதன தத்தத்த**
**தானதன தத்தத்த தனதான.**

பாரவித முத்தப்ப டீரபுள கப்பொற்ப
யோதரநெ ருக்குற்ற இடையாலே
பாகளவு தித்தித்த கீதமொழி யிற்புட்ப
பாணவிழி யிற்பொத்தி விடுமாதர்
காரணிகு ழற்கற்றை மேல்மகர மொப்பித்த
காதில்முக வட்டத்தில் அதிமோக
காமுகன கப்பட்ட ஆசையைம றப்பித்த
கால்களைம றக்கைக்கும் வருமோதான்
தேரிரவி உட்கிப்பு காமுதுபு ரத்திற்றெ
சாசிரனை மர்த்தித்த அரிமாயன்
சீர்மருக அத்யுக்ர யானைபடும் ரத்நத்ரி
கோணசயி லத்துக்ர கதிர்காம
வீரபுன வெற்பிற்க லாபியெயி னச்சிக்கு
மேகலையி டைக்கொத்தின் இருதாளின்
வேரிமழை யிற்பச்சை வேயிலரு ணக்கற்றை
வேல்களில கப்பட்ட பெருமாளே. (7)

**தனதன தத்த தனதன தத்த**
**தனதன தத்த தனதான.**

மருவரு வெற்றி மலர் தொடா விற்கை
வலிசெயா நிற்கு மதனுலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட
மதி சுடா நிற்கு மதனுலும்
இருகனல் முத்த முதிரயா மத்தி
னிரவினல் நித்த மெலியாதே
இடருரு மெத்த மயல்கொளா நிற்கு
மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்றி லரியவே டிச்சி
கலவிகூர் சித்ர மணிமார்பா
ககனமா ணிக்க வடிவனே மிக்க
கதிரகா மத்தில் உறவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி
முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே லிட்ட கொடியசூர் கெட்டு
முறியவேல் தொட்ட பெருமாளே (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தானதன தானத் தனதான தானதன தானத் தனதான.**

மாதர்வச மாயுற் றுழல்வாரும் மாதவமெ ணுமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும் தீநரக மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா நாரியிரு வோரைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமானே. (9)

**தனன தான தான தத்த தனன தான தான தத்த**
**தனன தான தான தத்த தனதான.**

முதிரு மார வார நட்பொ டிலகு மார வார மெற்றி
முனியு மார வார முற்ற கடலாலே
முடிவி லாத தோர்வ டக்கில் எரியு மால மார்பி டத்து
முழுகி ஏறி மேலெ ரிக்கு நிலவாலே
வெதிரி லாயர் வாயில் வைத்து மதுர ராக நீடி சைக்கும்
வினைவி டாத தாயருக்கு மழியாதே
வினையு மோக போக முற்றி அளவி லாத காதல் பெற்ற
விகட மாதை நீய ணைக்க வரவேணும்
கதிர காம மாந கர்க்கு ளெதிரி லாத வேல்த ரித்த
கடவு ளேக லாப சித்ர மயில்வீரா
கயலு லாய்வி லோச னத்தி களப மார்ப யோத ரத்தி
ககன மேவு வாளொ ருத்தி மணவாளா
அதிர வீசி யாடும் வெற்றி விடையி லேறு மீசர் கற்க
அரிய ஞான வாச கத்தை அருள்வோனே.
அகில லோக மீது சுற்றி அசுர லோக நீறெ ழுப்பி
அமரர் லோகம் வாழவைத்த பெருமானே. (10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினத்தார்

## உடற்கூற்று வண்ணம்

தன தன தான தன தன தான
தந்த தனந்தன தந்த தனந்த
தனன தனந்த தனன தனந்த
தானன தானன தானன தந்த
தந்ததன தான தனதான

ஒருமடமாது மொருவனுமாகி
யின்பசுகந்தரு மன்புபொருந்தி
யுணர்வுகலங்க வொழுகியவிந்து
வூறுசுரோணித மீதுகலந்து -

பனியிலோர்பாதி சிறுதுளிமாது
பண்டியில்வந்து புகுந்துதிரண்டு
பதுமவரும்பு கமடமிதென்று
பார்வை மெய்வாய் செவி கால் கைகளென்ற -

உருவமுமாகி யுயிர்வளர் மாத
மொன்பது மொன்று நிறைந்து மடந்தை
யுதரமகன்று புவியில்விழுந்து
யோகமும் வாரமு நாளுமறிந்து —

மகளிர்கள்சேனை தரவணையாடை
மண்படவுந்தியு தைந்து கவிழ்ந்து
மடயில்கொங்கை யமுதமருந்தி
யோரறிவீரறி வாகிவளர்ந்து —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளிநகையூற லிதழ்மடவாரு
வந்துமுகந்திட வந்துதவழ்ந்து
மடியிலிருந்து மழலை மொழிந்து
வாவிருபோவென நாமம் விளம்ப—

உடைமணியாடை யரைவடமாட
வுண்பவர் தின்பவர் தங்களொடுண்டு
தெருவிலிருந்து புழுதியளைந்து
தேடியபாலரொ டோடி நடந்து—
அஞ்சுவயதாகி விளையாடியே.

உயர்தருஞான குருவுபதேச
முந்தமிழின்கலை யுங்கரைகண்டு
வளர்பிறையென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும்வந்து—

மயிர்முடிகோதி மறுபதநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டைபுனைந்து
மணிபொனிலங்கு பணிகளணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க—

மதனசொரூப னிவனென மோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழிகொண்டு சுழியவெறிந்து
மாமயில் போலவர் போவதுகண்டு—

மனதுபொருமல வர்பிறகோடி
மங்கலசெங்கல சந்திகழ் கொங்கை
மருவமயங்கி யிதழமுதுண்டு
தேடியமாமுதல் சேரவழங்கி—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

## தேவராயசுவாமிகள் பாடிய

# ஶ்ரீ கந்தர் சஷ்டி கவசம்

காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்,
நெஞ்சில் பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் -
கதித்து ஓங்கும் நிஷ்டையும் கைகூடும், நிமலர்
அருள் கந்தர் சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன்அடி நெஞ்சே குறி.

நூல்

### நிலை மண்டில ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்கு உதவும் செங்கதிர் வேலோன்,
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட,
மையல் நடஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என்று உவந்து.
வரவர வேலா யுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா வருக வருக,
நேசக் குறமகள் நினைவோன் வருக,
ஆறுமுகம் படைத்த ஐயா வருக,
நீறுஇடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரவண பவனார் சடுதியில் வருக,
ரஹண பவச, ரரரர ரரர
ரிஹண பவச, ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹ, வீரா நமோ நம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக,
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டு ஆயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும். உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும், கிளரொளி யையும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் நீயும், தனிஒளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக,
ஆறு முகமும், அணிமுடி ஆறும்,
நீறு இடு நெற்றியும், நீண்ட புருவமும்,
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்,
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்,
ஈராறு செவியில் இலகுகுண்டலமும்
ஆறு இரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும், பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,
முப்புரி நூலும், முத்து அணி மார்பும்,
செப்பு அழகு உடைய திருவயிறு உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்,
நவரத்னம் பதித்த நல்சீ ராவும்,
இருதொடை அழகும், இணைமுழந்தாளும்,
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு, டிகுகுண டிகுண
ரரரர ரரரர, ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி, ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு, டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு, டங்கு டிங்குகு
விந்து விந்து, மயிலோன் விந்து
முந்து முந்து, முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதன் என்று
உன்திரு வடியை, உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து, உன் இணையடி காக்க!
என்உயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம், அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்து இருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்இளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ந வடிவேல் காக்க
சேர்இள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நல்துணை யாக,
நாபிக் கமலம், நல்வேல் காக்க
முப்பால் நாடியை. முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரைஇருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில், சாமத்தில், எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம்பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம், வலாஷ்டிகப் பேய்கள்,
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட,
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்,
எல்லினும். இருட்டிலும், எதிர்ப்படும் அண்ணரும்,
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்,
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டாளங்களும்
என்பெயர் சொலவும் இடிவிழுந்து ஓடிட,
ஆனை அடியினில், அரும்பாவைகளும்,
பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்,
நகமும் மயிரும், நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே, பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும், ஒட்டியப் பாவையும்,
காசும் பணமும், காவுடன் சோறும்,
ஓதும் அஞ்சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட,
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள்எனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி, மதிகெட்டு ஓட
படியினில் முட்டப், பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம், கதறிடக் கட்டு;
கட்டி உருட்டு, கால்கை முறிய;
கட்டு கட்டு, கதறிடக் கட்டு,
முட்டு முட்டு, முழிகள் பிதுங்கிட,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கு செக்குச், செதில் செதிலாக
சொக்கு சொக்குச், சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து, கூர்வடி வேலால்,
பற்று பற்று, பகலவன் தணல்எரி
தணல்எரி தணல்எரி. தணல்அது ஆக,
விடுவிடு வேலை, வெருண்டது ஓட
புலியும் நரியும், புன்நரி நாயும்
எலியும் கரடியும், இனித்தொடர்ந்து ஓடத்,
தேளும் பாம்பும் செய்யான் பூரான்,
கடிவிட விஷங்கள். கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள், எளிதுடன் இறங்க,
ஒளிப்பும் சுளுக்கு ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புரிதி
பக்கப் பிளவை, படர்தொடை வாழை,
கடுவன், படுவன் கைத்தாள் சிலந்தி,
பற்குத்து, அரணை, பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும், என்தனைக் கண்டால்
நில்லாதுஓட, நீஎனக்கு அருள்வாய்,
ஈரேழ் உலகமும், எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும். மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க. உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!
அரிதிரு மருகா! அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை,
இடும்பனை யழித்த. இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்காமத்து உறை, கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ். பால குமாரா!
ஆவினன் குடிவாழ், அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே!
காரார் குழலாள், கலைமகள் நன்றாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்நா இருக்க, யான் உனைப்பாட,
எனைத்தொடர்ந்து இருக்கும், எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன், பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன், ஆவினன் பூதியை
நேசமுடன், யான் நெற்றியில் அணியப்,
பாச வினைகள் பற்ற அது நீங்கி,
உன்பதம் பெறவே, உன்அருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக, வேலா யுதனார்
சித்திபெற்று, அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்,
வாழ்க வாழ்க வாரணத் துவசம்,
வாழ்க வாழ்க, என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்தால்
பெற்றவன் நீகுரு, பொறுப்பது உன்கடன்;
பெற்றவள் குறமகள், பெற்றவளாமே;
பிள்ளை என்று, அன்பாய்ப் பிரியம் அளித்து,
மைந்தன் என்மீது, உன் மனம்மகிழ்ந்து அருளித்,
தஞ்சம் என்று அடியர் தழைத்திட அருள்செய்;
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில், கருத்துடன் நாளும்,
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி,
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்,
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்,
ஒருநாள் முப்பத் தாறுஉருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய,
அஷ்டதிக்கு உள்ளோர் அடங்களும் வசமாய்த்,
திசைமன்னர் எண்மர், செயலது அருளுவர்,
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்,
நவகோள் மகிழ்ந்து நன்மை அளித்திடும்,
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்,
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்,
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்,
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்,
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நடனம் புரியும்,
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்து எனது உள்ளம், அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉணவு ஆகச்,
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்,
இருபத் தெழுவர்க்கு, உவந்துஅமுது அளித்த
குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி,
எனைத்தடுத்து ஆட்கொள, என்றனது உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி,
தேவர்கள் சேனா பதியே போற்றி,
குறமகள் மனமகிழ் கோவே போற்றி,
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி,
கடம்பா போற்றி கந்தா போற்றி,
வெட்சி புனையும் வேளே போற்றி.
உயர்கிரி கனக சபைக்குஓர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்,
சரணம் சரணம் சரவண பவஓம்.
சரணம் சரணம் சண்முகா சரணம்.

ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று



## சரஸ்வதி

# சகலகலாவல்லி மாலை

வெண்டாமரை க்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான பித்
தாகவுண் டாகும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசி பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாபமயிலே
சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்கும் செந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
 பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
 னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
 நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
 சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
 தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி செய்தநல்
 காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
 கனலும் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
 சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற்
 பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கனல்
 காயுளங் கொண்டு தொண்டர்
தீண்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
 லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
 சகல காலவல்லியே. 7

சொல்விற் பனமு மவதான
 முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமைகொள்
 வாய் நளி னசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
 முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
 சகல கலாவல்லியே. 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெஞ்
ஞானத்தின் றேற்றமென்ன
நிச்சின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெங்குடைக் கீழாக
மேம்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பி லுன் போற்
கண்கண்ட தெய்வமுளதே
சகல கலாவல்லியே. 10

— குமரகுருபரர்

## சரஸ்வதியந்தாதி (திரட்டு)

### வெண்பா

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய வுணர்விக்கு மென்னம்மை — தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரார் திடர். 1

படிகநிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையுந் — துடியிடையும்
அல்லும் பகலு மநவரத முந்துதித்தாற்
கல்லுஞ்சொல் லாதே கவி. 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
வினந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங் குழலாளபி ராமி கடைக்கண்களே.

மணியே மணியி ளொளியே யொளிரு மணிபுனைந்த
வணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே.

உடைத்தனை வஞ்சப் பிறவியை யுள்ள முருகுமன்பு
படைத்தனை பத்ம பதயுகஞ் சூடும் பணியெனக்கே
யடைத்தனை நெஞ்சத் தழுக்கையெல் லாம்நின் அருட்புனலா
றுடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

ஆத்தாளை யெங்க ளபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமும் கரும்பு மங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கொரு தீங்கில்லையே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பல துறைகளிலும் சிறப்புற வைத்த எங்கள் குடும்பத் தலைவரை இழந்து எல்லையற்ற துன்பத்தில் வாடும் எங்கள் குடும்பத்திற்கு ஆறுதல் கூறியும் தேறுதல் செய்திகள் அனுப்பியும். அவரது மரணக்கிரியைகளிலும் அந்தியக் கிரியைகளிலும் கலந்து கொண்டு உதவி ஒத்தாசை தந்த எம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியை பணிவன்புடன் நவில்கின்ருேம்.

இங்ஙனம்
திருமதி வள்ளியம்மை
மக்கள் – மருமகன்

ஆர் எஸ் அச்சகம், யாழ்நகர். 3 / 84 / 302

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org